# HSBC ஸ்ரீலங்கா – சமூக ஊடக விதிகள் மற்றும் நிபந்தனைகள்

இலங்கையிலுள்ள த ஹொாங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் (HSBC) தனது வாடிக்கையாளர்களுக்குத் தகவல்களை அறிவிக்கவும் அவர்களுக்கு உதவி செய்யவும் அவர்களுடன் ஈடுபாட்டை வைத்திருக்கவும் சில சமூக ஊடகத் தளங்களில் சனெல்கள், பக்கங்கள் மற்றும் கணக்குகளைச் செயற்படுத்துகின்றது. வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், அவை அனைத்தும் இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்களுக்காக இலங்கையில் பயன்படுத்தப்படும் நோக்கத்தைக் கொண்டவையாகும். எமது சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, இந்தச் சனெல்களில் HSBC தொடர்பாக வெளியிடப்படும் கருத்துகள் மற்றும் இடுகைகளை நாம் கண்காணித்துப் பதிவு செய்கின்றோம்.

நாம் இடுகை செய்யும் தகவல்கள் தவிர, இந்தச் சனெல்களில் இடுகை செய்யப்படும் வேறேதும் தகவல்களுக்கு HSBC பொறுப்பாளியாகாது. சமூக ஊடகத் தளங்கள், அவற்றின் பண்டங்கள் மற்றும் சேவைகளை அல்லது மூன்றாம் தரப்புகளினால் அல்லது ஏனைய பாவனையாளர்களினால் இடுகை செய்யப்படும் ஏதேனும் தகவல்களை நாம் ஆமோதித்து ஒப்புதல் வழங்குவதில்லை. HSBC யினால் பயன்படுத்தப்படும் சமூக ஊடகத் தளங்களின் (உதா. டுவிட்டர் மற்றும் ஃபேஸ்புக்) பயன்பாட்டு விதிமுறைகள் மற்றும் கொள்கைகள், HSBC சனெல்கள் மற்றும் பக்கங்களை நீங்கள் பயன்படுத்தும்போதும் ஏற்புடையனவாக அமையும்.. இப் பயன்பாட்டு விதிமுறைகள் மற்றும் கொள்கைகளும் HSBC யின் விதிமுறைகள் மற்றும் கொள்கைகளும் உங்களால் பின்பற்றப்படுவதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். இத் தளத்தைப் பயன்படுத்தும்போது, ஏற்புடைய சட்டம். பிரமாணம் அல்லது HSBC உடன் நீங்கள் செய்திருக்கக்கூடிய ஏதேனும் ஒப்பந்தங்களின் விதிமுறைகளுக்கு முரணான எவ்வித செயலிலும் ஈடுபடாமல் இருப்பதற்கு நீங்கள் இணங்குகின்றீர்கள்.

இத் தளத்தின் உள்ளடக்கம் மற்றும் விடயங்கள் தகவல் நோக்கங்களுக்கு மட்டுமானவை. அவை HSBC யின் பங்குகள், பிணையங்கள் அல்லது வேறேதும் நிதிப் பத்திரங்களையோ பண்டங்கள் மற்றும் சேவைகளையோ வழங்குகின்ற அல்லது கோருகின்ற நோக்கத்தைக் கொண்டவை அல்ல. முதலீடு, வரி அல்லது வேறேதும் விடயங்கள் தொடர்பான தொழில் நிபுணத்துவ ஆலோசனைகள் எதனையும் HSBC அதன் சமூக ஊடகத் தளங்களின் ஊடாக

வழங்குவதில்லை. இத் தளத்தில் உங்களுக்கும் HSBC க்கும் இடையே இடம்பெறும் ஏதேனும் தொடர்பாடல், வாடிக்கையாளர் என்ற முறையில் நீங்கள் எம்முடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் எவற்றையும் திருத்தவோ மா,ற்றவோ அல்லது அவற்றிற்கு மேலான ஆதிக்கத்தைக கொண்டிருக்கவோ மாட்டாது.

நீங்கள் சமூக ஊடகங்களின் வாயிலாக HSBC உடன் தொடர்புகொள்ளும்போது உங்கள் தனிப்பட்ட தகவல்கள் HSBC யின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அந்தந்தச் சமூக ஊடகத் தளத்தின் வழங்கிகளினால் சேமித்து வைக்கப்படும். உங்கள் தனிப்பட்ட தரவுகளை நாம் எவ்வாறு பயன்படுத்துவோம் என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து எமது தனியுரிமக் கொள்கையைப் பார்க்கவும். அத்தகைய தளங்களில் இடுகை செய்யப்படும் ஏதேனும் தகவல்கள் பொதுமக்களினால் அணுகப்படலாம் மற்றும் வாசிக்கப்படலாம். ஆகவே, தனிப்பட்ட கணக்குத் தகவல்கள் அல்லது நிதி ஏற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு இது ஒரு பொருத்தமான களம் அல்ல. சமூக ஊடகத் தளங்கள் ஊடாக உங்கள் தனிப்பட்ட, கணக்கு அல்லது பாதுகாப்புத் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும்படி HSBC உங்களை ஒருபோதும் கேட்க மாட்டாது. நீங்கள் அத்தகைய தகவல்களை அத்தகைய சனெல்களில் இடுகை செய்யக் கூடாது. நாம் எமது சமூக ஊடகத் தளங்களில் இடுகை செய்யும் விடயங்களை பகிர்ந்துகொள்ளவும் அவை குறித்துக் கருத்து வெளியிடவும் நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள். ஆனால், நீங்கள் அந்த விடயங்களில் மாற்றம் செய்யக் கூடாது என்பதும் அவ் விடயங்களின் மூலாதாரம் எம்முடையது என்று மேற்கோள் காட்டுவதும் அதற்கு அவசியமாகும். நாம் எமது சமூக ஊடகத் தளங்களில் இடுகை செய்யும் சகல மூல உள்ளடங்கங்களும் HSBC யின் பதிப்புரிமைக்கு உட்பட்டதாகும். HSBC யின் வர்த்தக அடையாளங்கள், இலச்சினைகள் அல்லது வடிவமைப்புகள் யாவும் HSBC யின் அறிவுசார் சொத்துரிமையாக அமைகின்றன.

இத் தளம் அல்லது இத் தளத்தித்துடன் இணைக்கப்பட்ட ஒரு தளத்தின் பாவனையின் விளைவாக அல்லது இத் தளத்தின் அல்லது இத் தளத்துடன் இணைக்கப்பட்ட ஒரு தளத்தைப் பயன்படுத்துவதில் ஏற்படும் தாமதம் அல்லது இயலாமையின் விளைவாக ஏற்படும் நேரடியான, விசேட, தண்டனைக்குரிய, தொடர்விளைவான அல்லது நேரடியற்ற சேதங்களுக்கு (இலாப இழப்பு, பதிலீட்டு சேவையைப் பெறுவதற்கான செலவு, இழக்கப்பட்ட வாய்ப்பு என்பனவும் இதில் உள்ளடங்கும்), அத்தகைய சேதங்களுக்கான சாத்தியம் பற்றி

HSBC க்கு அறிவிக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், இத் தளத்தில் தகவல்களை உருவாக்குதல், தயாரித்தல் அல்லது வழங்குவதில் சம்பந்தப்பட்ட HSBC அல்லது வேறேதும் தரப்போ, அல்லது அவற்றின் அலுவலர்கள், பணிப்பாளர்கள், ஊழியர்கள் அல்லது பிரதிநிதிகளோ எவ்விதத்திலும் பொறுப்பாளியாக மாட்டார்கள்.

இந்த வரையறையானது, உபகரணத்தைப் பயன்படுத்தும் ஒருவரைப் பாதிக்கக்கூடிய ஏதேனும் வைரசுகள், தரவு அல்லது தீங்கான குறியீடு, தளத்தின் கோப்புகளுக்கும் பயன்படுத்துபவரின் உலாவி அல்லது மற்றைய தளத்தை அணுகும் நிகழ்ச்சித்திட்டத்திற்கும் இடையிலான ஏதேனும் பொருத்தமின்மை அல்லது ஏதேனும் இலெக்ட்ரோனிக் அல்லது தொலைபேசி உபகரணத்தின், தொடர்பாடல் அல்லது இணைப்பு லைன்களின் செயலிழப்பு, அதிகாரமற்ற அணுகல், திருட்டு, இயக்குநர் தவறுகள் அல்லது ஏதேனும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அனர்த்தம் என்பவற்றையும் (ஆனால், அவற்றை மட்டுமல்ல) உள்ளடக்கும். இத் தளத்திற்கு அல்லது இணைக்கப்பட்ட ஒரு தளத்திற்குத் தொடர்ச்சியான, தடையற்ற அல்லது பாதுகாப்பான அணுகல் வசதி கிடைக்குமென HSBC உத்தரவாதம் அளிப்பதில்லை. இணைக்கப்பட்ட தளங்களினால் வழங்கப்படும் உள்ளடக்கம், சரிநுட்பத்தன்மை, வெளியிடப்படும் கருத்துகள் மற்றும் ஏனைய இணைப்புகள் HSBC யினால் விசாரிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கு எவ்வித அவசியமும் கிடையாது. இத் தளத்தில் அல்லது இணைக்கப்பட்ட ஒரு தளத்தில் பிரசுரிக்கப்படும் தகவல், மென்பொருள், பண்டங்கள் மற்றும் சேவைகளின் விபரங்களில் தவறுகள் அல்லது அச்சுப் பிழைகள் இருக்கக்கூடும். அத்தகைய தவறுகள் அல்லது பிழைகளுக்கு HSBC மற்றும்/அல்லது HSBCயின் அங்கத்துவ நிறுவனங்கள் எவ்வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள மாட்டா. இத் தளத்திலும் இணைக்கப்பட்ட தளங்களிலும் உள்ள தகவல்கள் காலத்திற்குக் காலம் மாற்றப்படும். HSBC எந்த நேரத்திலும் இத் தளத்திற்கு முன்னேற்றங்களை அல்லது மாற்றங்களைச் செய்யக்கூடும். .

இத் தளத்தின் இடைநிறுத்தம், திருத்தம் அல்லது இரத்துச்செய்கை, தொழில்நுட்பப் பிரச்சினை, பெறப்பட்ட அல்லது இடுகை செய்யப்பட்ட சமர்ப்பணங்கள் உள்ளிட்ட (ஆனால் அவை மட்டுமல்ல) விடயங்கள் தொடர்பாக ஏற்படும் சகல பொறுப்புகளில் இருந்தும் உடற் காயம், மரணம், சேதம் அல்லது இழப்புக்கான பொறுப்புகளில் இருந்தும் HSBC ஐயும் அதன்

தாய்நிறுவனம், இணை நிறுவனங்கள், உப நிறுவனங்கள், அலுவலர்கள், பணிப்பாளர்கள், முகவர்கள், ஊழியர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் இத் தளத்தின் உருவாக்கம் மற்றும் செயற்படுத்தலுடன் தொடர்புடைய ஏனைய அனைவரையும் நீங்கள் விடுவிக்கின்றீர்கள்.

மேலும், இத் தளத்தில் பிரவேசிப்பதன் மூலம், இதிலுள்ள விடயங்களைப் பார்வையிடுவதன், அணுகுவதன் மற்றும் பதிவிறக்கம் செய்வதன் மூலம், தளத்தில் உலாவுவதன் அல்லது வேறேதும் வழியில் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் HSBC அதன் முகவர்கள், சேவை வழங்குநர்கள், அவற்றின் தாய்நிறுவனங்கள், அவற்றின் உப நிறுவனங்கள், இணை நிறுவனங்கள், அடுத்துறுநர்கள், உரிமம் பெற்றவர்கள் மற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்கள், மேற்படி நிறுவனங்களின் பணிப்பாளர்கள், அலுவலர்கள், முகவர்கள், பங்குரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீறுதலின் விளைவாக அல்லது உங்கள் சமர்ப்பணங்களின் விளைவாக ஏற்படக்கூடிய சகல விதமான உரிமைக்கோரல்கள், இழப்புகள், கிரயங்கள், சேதங்கள், பொறுப்புகள் மற்றும் செலவுகளுக்கு (நியாயமான சட்டத்தரணி கட்டணங்கள் மற்றும் செலவுகளும் உட்படும்) எதிரான இழப்பெதிர்காப்பை வழங்கவும் அவர்களைத் தீங்கிலிருந்து பாதுகாக்கவும் நீங்கள் இணங்குகின்றீர்கள்.

## சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களிலிருந்து விலகுதல்

நாம் உங்களுக்குச் சமூக ஊடகங்களின் மூலம் நேரடி அஞ்சல்கள் மற்றும் விளம்பரங்கள் அனுப்புவதை நிறுத்த வேண்டுமென நீங்கள் எந்த நேரத்திலாவது விரும்பினால், தயவுசெய்து 2 511 611 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக எமது அழைப்பு நிலையத்திலுள்ள எமது பிரதிநிதிகளுடன் தொடர்புகொள்ளுங்கள். நாம், உங்களுக்கு எவ்வித செலவும் இல்லாமல், 30 நாட்களுக்குள் உங்கள் வேண்டுகோள் தொடர்பில் நடவடிக்கை எடுத்து, நேரடி அஞ்சல்கள் மற்றும் சமூக ஊடக விளம்பர இயக்கங்கள் ஊடான எதிர்கால சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் நீங்கள் உள்ளடக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவோம்.

HSBC இனால் வேறேதும் டுவிட்டர் அல்லது ஃபேஸ்புக் பாவனையாளர், பக்கங்கள், விபரத்தொகுப்புகள் பின்பற்றப்படுவதை அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பின் உள்ளடக்கம் மீள டுவீட் செய்யப்படுவதை அல்லது பகிர்ந்துகொள்ளப்படுவதை HSBC யின் ஆமோதிப்பாகக் கொள்ள முடியாது.

HSBC தற்சமயம் இலங்கையில் பின்வரும் உத்தியோகபூர்வ சமூக ஊடக சனெல்களை செயற்படுத்துகின்றது:

HSBC Sri Lanka Facebook page

மேலதிக வழிகாட்டுதல்களுக்கு, பிரவேசியுங்கள்:

http://www.hsbc.com/terms-and conditions?WT.mc_id=HGHQ_twitter_tnc#socialmedia